1

எனது எண்:- 01 /63
கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு,
வடக்கு கிழக்கு மாகாணம்
உட்துறைமுக வீதி,
திருகோணமலை.
07.12.2005

வடக்கு கிழக்கு மாகாண சகல
கூட்டுறவுச்சங்க பொது முகாமையாளர்கட்கும்.

## பிரசவ விடுமுறை கூட்டுறவு ஊழியர் விதிக்கோவை 2:7 திருத்தம்

**01.** 2005..02.03 திகதிய, அரச நிர்வாக அமைச்சின் 04/2005 இலக்கங்கொண்ட சுற்றுநிருபத்தின் பிரகாரம் பெண் அரச ஊழியர்களுக்கு ஒவ்வொரு மகப்பேற்றுக்கும் 84 நாட்கள் பிரசவ விடுமுறையும் 84 நாட்கள் அரைச் சம்பளத்துடனான பிரசவ விடுமுறையும் 84 நாட்கள் சம்பளமற்ற பிரசவ விடுமுறையும் வழங்க அரசு தீர்மானித்துள்ளது. இதனை கூட்டுறவு ஊழியர்களுக்கும் நடைமுறைப்படுத்த வடக்கு கிழக்கு மாகாண கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு தீர்மானித்துள்ளமையால் கூட்டுறவு ஊழியர் விதிக்கோவை 2ம் அத்தியாயம் 2:7 உப விதிக்கு பதிலாக பின்வரும் விதி 2005.01.01 திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தும் வண்ணம் பதிலீடு செய்யப்படுகிறது.

### 2:7 பிரசவ விடுமுறைகள்

2:7:1 நிரந்தர, தற்காலிக, அமய அல்லது பயிலுனர் பெண் அலுவலர்கள் இப் பிரிவின் கீழ் பிரசவ விடுமுறையை பெறுவதற்கு உரித்துடையவர்கள் ஆவர்.

2:7:2 <u>சம்பளத்துடனான பிரசவ விடுமுறைகள்</u>

2:7:2:1 கூட்டுறவு சேவையிலுள்ள பெண் ஊழியர் ஒருவருக்கு உயிர்வாழும் ஒவ்வொரு மகப்பேற்றுக்கும் 84 தினங்கள் சம்பளத்துடனான விடுமுறையை அனுபவிக்க உரித்துடையவராவர். பிரசவம் நிகழ்ந்து 4 வாரங்கள் செல்ல முன் ஊழியர் மீண்டும் கடமையை பொறுப்பேற்க அனுமதிக்கப்படமாட்டார். இப் பிரிவின் கீழ் விடுமுறையை பெற்றுக்கொள்வதற்கு வைத்திய அத்தாட்சிப்பத்திரம் ஒன்றினையோ, அல்லது பிறந்த குழந்தையின் பிறப்பு அத்தாட்சிப்பத்திரத்தையோ சமர்ப்பித்தல் வேண்டும்.

2:7:2:2 இவ்வாறு வழங்கப்படும் பிரசவ விடுமுறையை கணக்கிடும் பொழுது அவ் விடுமுறைக் காலத்திற்குள் வருகின்ற அரசாங்க விடுமுறைகள், சனிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமை தினங்களை அதில் உள்ளடக்கலாகாது.

2:7:2:3 இவ்விடுமுறை காலத்தை பணியாளரின் சொந்த விடுமுறைகளில் இருந்து கழித்தல் ஆகாது என்பதுடன் , இவ் விடுமுறைக் காலத்தை முழு சம்பளத்துடனான ஒரு விசேட விடுமுறையாக கருத வேண்டும்.

2:7:2:4 மகப்பேற்றின் போது பிறக்கும் போதே மரணம் நிகழ்கின்ற ஒரு பிள்ளைப் பிறப்பிலும் பிரசவத்திலிருந்து 6 வாரங்கள் செல்ல முன் குழந்தை மரணிக்கின்ற சந்தர்ப்பத்திலும் குழந்தையின் மரண சான்றிதழை அல்லது வைத்தியச் சான்றிதழை ஒன்றினை சமர்ப்பிக்கும் பட்சத்தில் விசேட சம்பளத்துடனான விடுமுறையாக குழந்தை பிரசவித்த திகதியிலிருந்து ஆறு வார கால விடுமுறை வழங்க வேண்டும்.

### 2:7:3 அரைச் சம்பளத்துடனான பிரசவ விடுமுறைகள்

2:7:3:1 மேற் கூறிய 2:7:2:1 ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளின் படி விடுமுறை பெற்றுக்கொண்ட பின் குழந்தையைப் பாதுகாத்துக் கொள்வதற்காக அரைச் சம்பளத்துடனான 84 நாட்கள் விடுமுறை பெற உரித்துண்டு.

2:7:3:2 அரைச் சம்பளத்துடனான விடுமுறைக் காலத்திற்குள் வருகின்ற அரசாங்க விடுமுறைகள், சனிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமை தினங்களை அரைச் சம்பள விடுமுறைகளாக கருத வேண்டும்.

### 2:7:4 சம்பளமற்ற விடுமுறைகள்

2:7:4:1 மேற் கூறிய 2:7:2:1 ஆம் உட்பிரிவின் கீழ் அங்கிகரிக்கப்பட்ட விடுமுறைகள் முடிந்த பின் மேலும் குழந்தையைப் பாதுகாக்கும் அவசியம் ஏற்படும் போது மட்டும் சம்பளமற்ற 84 நாட்கள் விடுமுறை வழங்கலாம்.

2:7:4:2 இப் பிரிவின் கீழ் வழங்கப்படுகின்ற விடுமுறைகளைக் கணிப்பீடு செய்யும் போது அந்த விடுமுறைக் காலத்துக்குள் வரும் அரசாங்க விடுமுறைகள், சனிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமை தினங்களை அதில் உள்ளடக்க வேண்டும்

2:7:4:2 இந்த விடுமுறையை வழங்க முன் பணியாளருக்க கொடுக்கப்பட்டுள்ள கடன்களின் அல்லது முற்பணங்களின் மாத தவணைக் கட்டணங்களை தொடர்ந்து அறவிடுவதற்காக திருப்திகரமான ஒரு ஒழுங்கைச் செய்வது சங்கத் தலைவரினது பொறுப்பாகும்..

2:7:5 கருச்சிதைவுக்காக (Abortion & Miscarriage) விடுமுறை அவசியப்படுமாயின் வைத்தியசான்றிதழின் பேரில் பணியாளருக்கு உரித்தான மிகுதியான ஓய்வு விடுமுறையில் இருந்து பெற்றுக்கொள்ள முடியும்.

2:7:6 2:7:1 உட்பிரிவின் கீழ் பெற்றுக் கொண்ட விடுமுறைக் காலங்கள் முடிவுடைந்த பின் 2:7:3:1 ஆம் உட்பிரிவில் குறிப்பிட்டுள்ள விடுமுறைகளைப் பெறாவிட்டால் தனது குழந்தைக்கு பால் ஊட்டுவதற்காக வழமையாக சேவை நிலையத்திலிருந்து செல்லும் நேரத்திற்கு ஒரு மணித்தியாலங்கள் முன்னர் வெளிச்செல்ல அவர்களுக்கு அனுமதி வழங்கப்படல் வேண்டும். இவ் அனுமதி வழங்கப்பட வேண்டியது குழந்தையின் வயது ஆறு மாதங்கள் பூர்த்தியாகும் வரை மட்டுமாகும்.

2:7:7 மேலும் பெண் பணியாளர் ஒருவர் கர்ப்பமுற்றிருக்கும் காலம் ஐந்து மாதங்கள் ஆகும் போது சேவை நிலையத்திற்கு வருகை தரும் நேரத்தை 1/2 மணித்தியாலம் பிந்தியும் கடமை முடிந்து வெளிச்செல்லும் நேரத்தை 1/2 மணித்தியாலம் முந்தியும் செல்வதற்கு அனுமதி வழங்கப்படுகிறது. இச்சலுகை வழங்கப்படுவது பணியாளர் பிரசவ விடுமுறை பெறும் வரை மட்டுமாகும்.

2:7:8 மேற் கூறிய 2:7:3:1 ,2:7:4:1 பிரிவுகளின் கீழ் குறிப்பிட்டுள்ள விடுமுறைகள் அங்கிகரிக்கப்படுவது குழந்தை உயிர் வாழும் போது மட்டுமாகும். விடுமுறை பெற்றுக்கொள்வது குழந்தையைப் பாதுகாப்பதற்கானதால் ஏதேனும் காரணத்தால் குழந்தை மரணித்துவிட்டால் அத் திகதி தொடக்கம் ஏழு நாட்களின் பின் இவ் விடுமுறைகள் செல்லுபடி அற்றதாகும்.

2:7:9 மேற் கூறிய 2:7:3:1 ,2:7:4:1 பிரிவுகளின் கீழ் வழங்கப்படும் விடுமுறைகள் சம்பள ஏற்றங்களுக்கும் ஓய்வூதிய அலுவல்களுக்கும் தடையாக அமைதல் ஆகாது. சம்பளமற்ற விடுமுறைக் காலத்திறிகுள் ஏற்படும் வெற்றிடங்களின் போதும் பதவி உயர்வுகளின் போதும் இந்த விடுமுறைக் காலத்தை தடையாகக் கருதலாகாது.

2:7:10 மேற் கூறிய 2:7:3:1 ,2:7:4:1 பிரிவுகளின் கீழ் குறிப்பிட்டுள்ள விடுமுறைகளில் ஒரு பகுதியை இரத்துச் செய்து சேவைக்கு சமூகமளிக்க விரும்பினால் சங்கத் தலைவருக்கு அறிவித்து அவ்வாறு செய்யலாம்.

02. அதற்கமைவாக விதிக்கோவை 27:2 இன் பிரமாணம் மாற்றம் செய்யப்படுகின்றது. இச்சுற்றுநிருபம் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும் பதிவாளரதும் அனுசரணையுடன் வெளியிடப்படுகின்றது.

03. இச்சுற்றுநிருபத்தை சகல ஊழியர்களுக்கு தெரியப்படுத்த நடவடிக்கை எடுக்கவும்.

04. 26.11.2005 திகதிய ஆணைக்குழுவின் கட்டளைப்படி.

சொ.அமிர்தலிங்கம்,
செயலாளர்,
கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு,
வடக்கு கிழக்கு மாகாணம்.

SECRETARY
CO-OPERATIVE EMPLOYEES COMMISSION
NORTH EAST PROVINCE
TRINCOMALEE

பிரதிகள் :- 01. பிரதம செயலாளர் (வடக்கு கிழக்கு மாகாணம்)
02. கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும் பதிவாளரும் (வ. கி. மாகாணம்)
03. வடக்கு கிழக்கு மாகாண சகல கூட்டுறவு உதவி அபிவிருத்தி ஆணையாளர்களுக்கும்

ஜி.ஏ/-

පරිවර්තනයකි

මාගේ අංකය:- 01/63
සමුපකාර සේවක කොමිසන් සභාව,
උතුරු නැගෙනහිර පළාත,
ඇතුල් වරාය පාර,
ත්‍රිකුණාමලය.
07.12.2005

උතුරු නැගෙනහිර පළාත්
සියලු සමුපකාර පොදු කළමනාකරුවන් වෙත

## දරු ප්‍රසූත නිවාඩු සමුපකාර සේවක නීති සංග්‍රහය 2 :7 නැවත සංශෝධනය කිරීම

01 2005.02.03 දින රාජ්‍ය පරිපාලන අමාත්‍යාංශයෙන් 04/2005 අංකය දරණ චක්‍ර ලේඛය අනුව රාජ්‍ය සේවයෙහි බැදී සිටිනා ස්ත්‍රී සේවකයන්හට සෑම දරු ප්‍රසූතියක් සඳහාම දින 84 ක් දරු ප්‍රසූත නිවාඩු දින 84 ක් වැටුපෙන් අඩක් යන්න නිවාඩු හා තවද දින 84 ක් වැටුප් රහිත නිවඩු ලබාදීමට රජය තීරණය කොට ඇත. මෙම ක්‍රමය සමුපකාර සේවකයන් හට දියත් කිරීම පිණිස උතුරු නැගෙනහිර පළාත් සමුපකාර සේවක කොමිෂන් සභාව තීරණය කොට ඇති බැවින්, සමුපකාරක සේවක නීති සංග්‍රහයෙහි 2 වන වගන්තිය 2 : 7 උප ජේදය වෙනුවෙන් පහත සඳහන් නීතින් 2005.01.01 වන දින සිට ක්‍රියාත්මක වන පරිදි සසදා ඇත.

2: 7 **දරු ප්‍රසූත නිවාඩු**

2: 7: 1 ස්ථිර තාවකාලික අනියම් හා පුහුණුවීම යන පදනම මත පත්වීම් ලබා සේවයෙහි යොදනා ස්ත්‍රී සේවකයන්හට මෙයාකාරයෙන් දරු ප්‍රසූත නිවාඩු ලබා ගැනීමට සුදුසුකම් ලබයි.

2: 7: 2: **පඩි සහිත දරු ප්‍රසූත නිවාඩු**

2: 7: 2 : 1 සමුපකාරක සේවයෙහි සිටින ස්ත්‍රී සේවකයෙකු සෑම දරු ප්‍රසූතියකටම දින 84 ක් පඩි සහිත නිවාඩු ලබා ගැනීමට හැකිය දරු ප්‍රසූතියෙන් පසු සති 4ක් ගත වීමට පෙර උක්ත සේවකයා හට රාජකාරී බාර ගැනීමට අනුමැතිය දෙනු නොලැබේ. මෙම නිවාඩු නිසිසේම ලබා ගැනීමට නම් වෛද්‍ය සහතිකයෙන් හෝ ප්‍රසූත වූ දරුවාගේඋපන්නෙහි පිටපත්ද යොමු කල යුතුය.

2: 7: 2 : 2 මෙයාකාරයෙන් ලබාදෙනු ලබන දරු ප්‍රසූත නිවාඩු ගණනය කිරීමේදී එම නිවාඩු තුලට ඇතුලත්වන රජයේ නිවාඩු හා සෙනසුරාදා ඉරිදා යනාදී දිනයන් උක්ත නිවාඩු කාල පරිච්ජේදයට එකතු නොවේ.

2: 7: 2 : 3 මෙම නිවාඩු පරිච්ඡේදය තුල සේවකයාගේ පෞද්ගලික නිවාඩු තුලින් අඩු කිරීම් නොවිය යුතු අතර, උක්ත නිවාඩු කාලය පූර්ණ පඩි සහිතව විශේෂ නිවාඩුවක් ලෙස සැලකිය යුතුය.

2: 7: 2 : 4 දරු ප්‍රසූතිය හිදී දරුවා මරණයට පත් වූ අවස්තාවකදීහෝ නැතහොත් දරු ප්‍රසූතියෙන් පසු එම දරුවා සති 6කේ තුලදී මරණයට පත්ව අවස්ථාවකදී දරුවාගේ මරණ සහතිකය නැතහොත් වෛද්‍ය සහතිකයක් යොමු කිරීමෙන් පඩි සහිතව විශේෂ නිවාඩුවක් දරුවා ප්‍රසූත වූ දින සිට සති 6 ක් කාලයක් ලබා දිය හැකිය.

2: 7: 3 **<u>පඩි අඩක් සහිතව දරු ප්‍රසූත නිවාඩු</u>**

2: 7: 3 : 1 ඉහත සඳහන් 2: 7: 2 : 1 වන උප වගන්තිය අනුව නිවාඩු ලබා ගත් පසු දරුවා සුරැකීම යන හේතූන් මත අඩක් සහිතව දින 84 ක් නිවාඩු ලබා ගත හැක.

2: 7: 3 : 2 පඩි අඩක් සහිතව ලබා ගන්නා නිවාඩු කාල පරිච්ඡේදය තුලදී හසුවන රජයේ නිවාඩු සෙනසුරාදා, ඉරිදා යන දිනයන් පඩි අඩක් සහිත නිවාඩු දිනයන් ලෙස සැලකිය යුතුය.

2: 7: 4 : **<u>පඩි රහිත නිවාඩු</u>**

2: 7: 4 : 1 ඉහත සඳහන් 2: 7: 2 : 1 වන උප වගන්තිය අනුව අනුමැතිය ලබා දුන් නිවාඩු අවසන් වූ පසු වැඩි දුරටත් දරුවාගේ ආරක්ෂාව සඳහා නිවාඩු අවශ්‍ය යැයි සැලෙකනා විට පමණක් පඩි රහිතව දින 84 ක් නිවාඩු ලබා දිය හැක.

2: 7: 4 : 2 මෙයාකාරයෙන් ලබා දෙනු නිවාඩු ගණනය කිරීමේදී එම නිවාඩු කාලපරිච්ඡේදය තුල හසුවන රජයේ නිවාඩු සෙනසුරාදා ඉරිදා යනාදී දිනයන් උක්ත නිවාඩු දිනයන් සමඟ එකතු කල යුතුය.

2: 7: 4 : 3 උක්ත නිවාඩුවන් ලබා දීමට පෙර සේවකයා ලබගෙන ඇති සියලු ණය හා අත්තිකාරම් මුදල් හීන් මාසික අය කිරීම් කර ගැනීමට කුමක් හෝ ක්‍රමයක් යටතේ අය කිරීම කර ගැනීමට සමාගම් ප්‍රධානියා කටයුතු යෙදිය යුතුය.

2: 7: 5 යම් කිසි අවස්ථාවක මවට ගබ්සා වීමෙන් ( Abortion & Miscarriage ) එවැනි අවස්ථාවක නිවාඩු අවශ්‍ය වූ විටක වෛද්‍ය සහතිකයක් මගින් සේවකයාට ඉතිරි වීතිබෙන තම නිවාඩු තුලින් ලබා ගත හැක.

2: 7: 6 2: 7: 1 උප වගන්තිය යටතේ ලබා ගත් නිවාඩු අහවර වූ විටක 2: 7: 3 : 1 වන් උප වගන්තියෙහි සඳහන් වී ඇති නිවාඩු ලබා ගැනීමට අනවශ්‍ය යැයි සිතනා විටක තම දරුවන්හට මව් කිරි ලබා දීම පිණිස කාර්යාලයෙන් පිට සාමාන්‍ය වේලාව තුලින් පැයක කාලයක් කල් තියා කාර්යාලයෙන් පිට වීමට අනුමැතිය ලබා දිය යුතුය මෙම අනුමැතිය ලබා දිය හැක්කේ දරුවාට වයස මාස 6 ක කාලයක් වන තෙක් පමණි.

2: 7: 7 තවද ස්ත්‍රී සේවකයෙකු ගැබ්ගෙන මාස 5 ක කාලයක් වන විට කාර්යාලයට පමිනෙන වේලාවන්ගෙන් පැය 1/2 ක කාලයක් ප්‍රමාදව පැමිණීමටද පැය 1/2 ක කාලයක් කල් තියා කාර්යාලයෙන් පිට වීමටද අනුමැතිය ලබා දී ඇත. මෙම අනුමැතිය දෙන්නේ සේවකයා දරු ප්‍රසූති නිවාඩු ලබා ගැනීම තෙක් පමණි.

2: 7: 8 ඉහත සඳහන් 2: 7: 3:1 , 2: 7: 4 : 1 වගන්තින් යටතේ පහත සඳහන් කර ඇති නිවාඩුන් හට අනුමැතිය ලබා දෙන්නේ දරුවා ජීවතුන් අතර, රැඳී සිටිනා විට පමණි නිවාඩු ලබා දෙනු ලබන්නේ දරුවා සුරැකීමට යන හේතුව මත පමණි. යම් කිසි අවස්ථාවක දරුවා ජීවිතක්ෂයට පත් වුවහොත් එදින සිට දින හතක් අහවර වූ විටක මෙම සියලු නිවාඩු අනුමැතිය අවලංගු වනු ඇත.

2: 7: 9 ඉහත සඳහන් 2: 7: 3:1 , 2: 7: 4 : 1 වගන්තින් යටතේ ලබාදෙනු ලබන නිවාඩු පඩි වැඩිවීම් හා විශ්‍රාමික කටයුතුන් හට බාධාවක් නොවිය යුතුය. පඩි රහිත නිවාඩු කාල පරිච්ඡේදයේ තුලදීත් මතුවන කාර්ය මණ්ඩලය අඩුපාඩු අවස්ථා තුලදීත් තනතුරු උසස් වීම් වැනි අවස්ථා තුලදීත් මෙම නිවාඩු කාලපරිච්ඡේදය බාධාවක් ලෙස නොසැලකිය යුතුය.

2: 7: 10 ඉහත සඳහන් 2: 7: 3:1 , 2: 7: 4 : 1 වැනි වගන්තින් යටතේ පෙන්වා දී ඇති නිවාඩු කාලයන්ගෙන් කොටසක් අවලංගු කර නැවත සේවයට පැමිණීමට එකඟ නම් ඒ බව සමාගම් ප්‍රධානියාට ලිඛිතව දැනුම් දී එය ඒකාන්තයෙන්ම ඉෂ්ඨ කර ගත හැක.

02 එයට එකඟව නිති සංග්‍රහය 2: 7: 2 හි සැසදීමක් කරන්නේය. මෙම චක්‍ර ලේඛණ සමුපකාර කොමසාරිස් හා රෙජිස්ට්‍රාර්වරයාගේ අනුග්‍රහය මත නිකුත් කරන ලදි.

03 මෙම චක්‍ර ලේඛය සියලු සේවකාවන්හට දැන ගැනීමට කටයුතු සලසනු මැන

04 26.11.2005 දින කොමිෂන් සභාවේ නියෝගය මත

**එස්. අම්ර්තලිංගම්**
**ලේකම්,**
**සමුපකාර සේවක කොමිෂන් සභාව,**
**උතුරු නැගෙනහිර පළාත.**

**පිටපත්** **01** **ප්‍රධාන ලේකම් ( උතුරු නැගෙනහිර පළාත )**
**02** **සමුපකාර සංවර්ධන කොමසාරිස් හා රෙජ්ට්‍රාර් - උ.නැ. පළාත**
**03** **උතුරු නැගෙනහිර පළාත් සියලු සමුපකාර සහකාර සංවර්ධන කොමසාරිස් - උ.නැ. පළාත**